சார்பு நீதிமன்றம், இலால்குடி.
நாள். 21.04.2026
OS.No.173/2019
DW1 : நடராஜன் (வயது 91 ) த/பெ.சின்னசாமி ரெட்டியார்
( சாட்சிக்கு சத்திய பிரமாண வாக்குமூலம் வாய்மொழியாக செய்விக்கப்பட்டது)

**<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

தாவா வழக்கு முதன் முதலில் 2009 ல் திருச்சியில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அதன் பிறகு 15.07.2002 ல் வழக்கு நிலுவையில் இருக்கும்போது, வாங்கிய பட்டா எனது தரப்பு சான்றாவணம் பி.வா.சா.ஆ.3 என்றால் சரிதான். வழக்கு நிலுவையில் இருக்கும்போது, எனது செல்வாக்கை பயன்படுத்தி மோசடியாக உட்பிரிவு செய்து பட்டா வாங்கியுள்ளேன் என்றால் சரியல்ல.

வழக்குரையில் காண்பிக்கப்பட்டுள்ள 1, 2 அயிட்ட சொத்துக்களில் 1 வது அயிட்டத்தில் சாகுபடி செய்ததாக நான் கிரயம் பெற்றதாக சொல்லும் காலத்திலிருந்து தற்போது வரை சிட்டா , அடங்கல் எதுவும் தாக்கல் செய்யாததற்கும், 2 வது அயிட்ட சொத்திற்கு தற்போது வரை சிட்டா , அடங்கல் எதுவும் தாக்கல் செய்யாததற்கும் காரணம் எதுவும் இல்லை என்றால் அவ்வாறு செய்ய வேண்டும் என்று தெரியாது.

தாவா 1 வது அயிட்ட நிலத்திற்கு நானோ எனது மனைவியோ ஒருபோதும் சென்றதில்லை என்பதால் தான் சிட்டா அடங்கல் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நானோ எனது மனைவியோ தாவா 1,2 சொத்துக்களுக்கு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. 1974 ல் தாவா சொத்தின் 1 வது அயிட்ட சொத்தின் ஒரு ஏக்கரின் விலை என்ன என்றால் ரூ.3000/-. அதே சொத்திற்கு 1999 ல் ரூ.5000 அல்லது ரூ.6000 ஒரு ஏக்கருக்கு இருக்கும்.

அதேபோல், தாவா 2 வது அயிட்ட நத்தத்திற்கு 1999 ல் ஒரு செண்டின் மதிப்பு ரூ.200 அல்லது ரூ.300 இருக்கும். தற்போது தாவா 1 வது அயிட்ட சொத்தில் ஒரு ஏக்கர் மதிப்பு ரூ.30,000/-, ரூ.40,000/- இருக்கும். மேற்படி நிலம் மதிப்பு மிக்க நிலம் இல்லை, தரிசானது என்பதால் அதிக விலை பெறாது.

நத்தம் சொத்து தற்போது எவ்வளவு மதிப்பு பெறும் என்றால் ஒரு சென்ட் ரூ.500/- மதிப்பு பெறும். ஏற்கனவே நான் அளித்த சாட்சியத்தில் 1 ஆம் வாதி நாராயணன், 2 ஆம் பிரதிவாதியுடன் வந்து என்னிடம் கடன் வாங்கியதாக சொன்னது குறித்த விவரத்தை எதிர்வழக்குரையிலோ எனது முதல்விசாரணை வாக்குமூலத்திலோ குறிப்பிட்டு சொல்லாததற்கான காரணம் என்ன என்றால் சொல்லவேண்டும் என்று தோன்றவில்லை.

உண்மையான கடன் நடவடிக்கை நடைபெறவில்லை என்றும் 1 ஆம் வாதி நாராணயன் ஒருபோதும் எனது இடத்திற்கு கடன் வாங்குவதற்காக வரவே இல்லை என்றும் கூறினால் சரியல்ல. அதேபோல் நாராயணன் ஒரு பைசா கூட கடனாக வாங்கவில்லை என்றும் வழக்கிற்காக அவ்வாறு வாங்கியதாக நான் பொய்யுரைக்கிறேன் என்றால் சரியல்ல.

வாதிகள் சொத்திற்கு நான் ஒருபோதும் ஆசைப்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்கள் அனைத்தும் ஆதியில் அருணாச்சலம் ரெட்டியார் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. அருணாச்சலம் ரெட்டியாரின் வாரிசு என்ற முறையில் சுந்தர ரெட்டியாருக்கு பாத்தியப்பட்டது என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

தாவா சொத்துக்கள் சுந்தர ரெட்டியாருக்கு பாத்தியமாக இருந்தது என்றும் அவருக்கு பிறகு அவரது வாரிசுகளான 1 முதல் 3 வாதிகள் 2 ஆம் பிரதிவாதிக்கு மட்டும் பாத்தியமானது என்றால் அது பற்றி தெரியாது. சுந்தர ரெட்டியாரின் வாரிசுகளுக்கு தலைக்கு ஒரு பங்கு வீதம் 1 ஆம் வாதிக்கும் 2,3 வாதிகளுக்கு ஒரு பங்கும் 2 ஆம் பிரதிவாதிக்கு ஒரு பங்கும் பாத்தியமானது என்றால் சரியல்ல. சாட்சி தானாக முன்வந்து துரைசாமி ரெட்டியாருக்கு தான் சொத்தில் முழு பாத்தியம் உள்ளது என்று கூறுகிறார்.

பொதுவாக கடன் கொடுக்கும்போது, ஒரு சொத்தை காண்பித்தால் அந்த சொத்து காண்பிப்பவருக்கு சொந்தமானதா என்பதற்கு ஆதரவாக வில்லங்கத்தை

பார்க்காமல் கடன் கொடுப்பேனா என்றால் வில்லங்கம் எதுவும் பார்க்கவில்லை. புரோ நோட் வைத்து கடன் கொடுத்தேன். 2 ஆம் பிரதிவாதி கடன் கொடுப்பதற்கு முன்பு எனக்கு எவ்வளவு நாட்கள் பழக்கம் ஆனவர் என்றால் ஞாபகம் இல்லை.

1974 க்கு முன்பு துரைசாமி ரெட்டியார் எனக்கு 2,3 வருடங்களாக பழக்கம் ஆனவர். துரைசாமி எனக்கு தூரத்து உறவா என்றால் இல்லை பழக்கம் ஆனவர், ஒரே சமூகத்தை சேர்ந்தவர். கடன் கொடுக்கும்போது நாராயணன் உடன் இருந்ததாக சொல்லியுள்ளேன் என்றும் அவரிடம் ஏன் கையெழுத்து வாங்கவில்லை என்றால் அவர் கையெழுத்து போட கேட்டும் மறுத்துவிட்டார், தம்பிதான் போடுவார் என்று சொல்லிவிட்டார்.

துறையூரில் நான் தாக்கல் செய்த புரோநோட் அசல் வழக்கு எண்.2939/1979 என்ற வழக்கின் வழக்குரையை வாங்கி பார்த்தால் நாராயணன் கடன் வாங்கும்போது வந்தாரா என்பதும் கையெழுத்து போட மறுத்துவிட்டாரா என்று நான் கூறும் விவரம் உண்மையானதா என்று தெரிந்து கொள்ளலாம் என்றால் வழக்குரையில் அதனை சொல்லவேண்டும் என்ற அவசியம் இல்லை.

எனக்கும் 2 ஆம் பிரதிவாதியான துரைசாமிக்கும் இடையே கடன் பண பரிவர்த்தனை நடக்கும்போது 1 ஆம் வாதி நாராயணன் அந்த இடத்திற்கு வரவில்லை என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் 1 ஆம் வாதி நாராயணனுக்கும் அவரது சகோதரி இறந்து போன பங்காரம்மாவின் வாரிசுகளான 2,3 வாதிகளுக்கும் பங்கு பாத்தியமுள்ளது என்ற விவரம் எனது மனைவிக்கு நன்கு தெரியும் என்றால் சரியல்ல. அது தெரிந்திருந்தும் எனது மனைவிக்கு பழக்கமான 2 ஆம் பிரதிவாதியான துரைசாமியுடன் சேர்ந்து வஞ்சக கூட்டணி அமைத்துக்கொண்டு துறையூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 2939/1979 என்ற வழக்கில் உரிய தரப்பினர்களை சேர்க்காமல் தீர்ப்பாணை பெற்றுள்ளார்கள் என்றால் சரியல்ல.

மேற்படி போலியான தீர்ப்பை அடிப்படையாக வைத்து தாக்கல் செய்த நிறைவேற்று மனுவில் தாவா சொத்துக்களுக்கு உரிமை உடைய சுந்தர ரெட்டியாரின்

வாரிசுகளான வாதிகளை தரப்பினர்களாக சேர்க்க நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சேர்க்கவேண்டிய அவசியம் இல்லை.

உரிய வாரிசு மற்றும் தரப்பினர்களை சேர்க்காமல், நீதிமன்றத்தில் உண்மையை மறைத்து போலியான கிரயத்தையும், கொள்நிலை சுவாதினமோ நேரடி சுவாதினமோ தாவா சொத்துக்களை எடுக்காமலும், பொய்யாக இந்த வழக்கில் கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கு பிரதிவாதியாகிய எனது மனைவி முழு உரிமையாளர் மற்றும் உடைமையாளர் அல்ல என்றால் சரியல்ல.

2 ஆம் பிரதிவாதியின் பங்குகளை முறையாக நாங்கள் அடையவில்லை என்றாலும், என் தரப்பில் பெற்றுள்ள தீர்ப்பு சுவாதின அத்தாட்சி உண்மை உரிமையாளர்களான வாதிகளை எந்தவிதத்திலும் கட்டுபடுத்தாது என்றாலும், சட்டபடியும் நியாயபடியும் வாதிகள் கோரியுள்ள பரிகாரத்தை அடையத்தக்கவர்கள் என்றாலும் சரியல்ல.

நானும் பிரதிவாதியும் 20.11.2019 ல் வாதிகளின் பங்கு உரிமைக்கு இடையூறு செய்ய முயன்றதால், வாதிகள் தரப்பில் அப்போது தான் துறையூர் உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண். 2939/1979 என்ற வழக்கு விவரத்தையும் மற்றும் இலால்குடி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த நிறைவேற்று மனு எண்.49/1999 மற்றும் அதன் உத்தரவுகள் பற்றி அறிந்து குறிப்பிட்ட கால கெடுவிற்குள் அதாவது 12 ஆண்டுகளுக்குள் இந்த வழக்கை பாக பிரிவினை கோரி வாதிகள் தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் வாதிகளின் கோரிக்கை கால வரையறை சட்டத்தால் பாதிக்கப்படவில்லை என்றாலும், வாதிகள் வழக்கில் கோரியபடி பரிகாரம் பெற தக்கவர்கள் என்றாலும் சரியல்ல.

**<u>ம.வி</u>** - இல்லை.

/ signed/
நடராஜன்

சாட்சி சொல்ல சொல்ல திறந்த நீதிமன்றத்தில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு சாட்சி சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையெழுத்திட்டார

R.MOHANA
Digitally signed by R.MOHANA
Date: 2026.04.21 18:18:19 +0530

சார்பு நீதிபதி
இலால்குடி